

# சேர் பொன் இராமநாதன் நினைவுப் பேருரை




## திருமதி. அருட்செல்வி கிருபைராஜா

சிரேஸ்ர விரிவுரையாளர், (நடனத்துறை)
இராமநாதன் நுண்கலைக்கழகம்,
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்.


2016.11.12

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சேர் பொன் இராமநாதன் நினைவுப்பேருரை

இலங்கைத் திருநாட்டின் வரலாற்றில் இன, மத, மொழி வேறுபாட்டைக் கடந்து சமூகத்தின் மேம்பாட்டுக்காக தன்னை அர்ப்பணித்து செயலாற்றிய பெரியார் என எல்லோராலும் பாராட்டி ஏற்றுக்கொள்ளப்பட்டவர் சேர். பொன். இராமநாதன் அவர்கள். இன்று நாம் எக்காலத்துக்கும் தேவையான சிந்தனைக் கருவூலங்களைத் தந்துபோன அப்பெருமகனாரை நினைவுகூருகின்றோம். இலங்கையின் தேசிய வீரர்களுள் ஒருவர் என மதிக்கப்படும் அளவுக்கு சேவையாற்றிய பெருமகன் அவர்.

“இலங்கையின் தவப்புதல்வர்களில் ஒருவர் சேர். பொன்னம்பலம் இராமநாதன் என்பதில் எவர்க்கும் கருத்து வேறுபாடு இல்லை” இவ்வுலகில் தம்புகழ் நிறுவிச் சென்ற பெருமக்களுள் ஒருவர் என்பதை ஊரும் உலகமும் ஒப்புக் கொண்டுள்ளர் எனப் பெரியார் பற்றிய தனது ஆய்வில் பேராசிரியர் க. கைலாசபதி அவர்கள் பாராட்டியுள்ளார்.

கல்வியாலும் தூய சிந்தனையாலும் செயற்கரியவே செய்த சேர் பொன் இராமநாதனின் கல்விப்பணி, சமயப்பணி, அரசியல்பணி, சமூகப் பொருளாதாரப்பணி, முதலியன அறிஞர் பெருமக்கள் பலரால் ஆராயப்பட்டன. இன்றும் காலத்தின் சேவைக்கேற்ப பல கோணங்களில் ஆராயப்பட்டு வருகின்றன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பெரியார் ஆற்றிய பன்முகப்பட்ட பணிகளில் பல தமிழ் சமுதாயத்தையும் இந்துப்பண்பாட்டையும் மையப்படுத்தியனவாக அமைந்துள்ளமை குறிப்பிடத்தக்கது. இப்பணிகளில் இவர் தீவிரமாக செயல்பட அவர் பிறந்த குடும்பச்சூழல், குடும்பத்தினரின் கல்விப்புலமை, பண்பாடு, நாட்டுப்பற்று, போன்ற இன்னோரன்ன விடங்கள் உந்து சக்தியான துணைநின்றன எனின் மிகையாகாது.

1815ம் ஆண்டு சித்திரை மாதம் 16ம் திகதி கொழும்பில் உள்ள செட்டித்தெருவில் உள்ள மாளிகை போன்ற இல்லத்திலே பொன்னம்பல முதலியாருக்கும் செல்லாச்சி அம்மையாருக்கும் இராமநாதன் திருக்குழந்தையாகப் பிறந்தார். இவருக்கு ஒரு தமையனார் திரு.குமாரசாமி தம்பி அருணாசலம். 834ம் ஆண்டில் தமிழரின் முதற் பிரதியான முதலியார் இவரின் தாய்வழிப் பேரன் இவரது தாய்மாமன் காலாஜோதி ஆனந்தக்குமாரசாமியார். தந்தை சேர் முத்துக்குமாரசாமி இவர்கள் எல்லோரும் கல்வியிற் பெரியவர் செயற்கரியன செய்யும் சிந்தை கொண்டவர்கள்.

இவரது கல்வி கொழும்பு அக்கடமியிலும் சென்னை இராசதானிக் கல்லூரியிலும் இடம்பெற்றது. இவர் தனது இருப்பத்திரண்டாவது வயதில் பட்டம் பெறுமுன்னரே சட்டம் கற்று வழக்கறிஞர் ஆனார். அவ்வேளையில் இராமநாதன் கீழைத்தேச மேலைத்தேச விழுமியங்களின் திரளமைப்பாய் உருவாக்கினார். இவ்வேளையில் தமிழரின் முதற் பிரதிநிதியாக இருந்த இவரது தாய்மாமன் சேர். முத்துக்குமாரசாமி அவர்கள் இறைபதம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அடைந்தார். 1979ம் ஆண்டு ஆறுமுகநாவலரது முயற்சியால். இராமநாதன் மாமனாரின் இடத்துக்கு நியமனம் பெற்றார். இந்நாட்களில் இவருக்கு தமிழ் அறிஞர் சி. வை. தாமோதரம் பிள்ளையின் நட்பும் அன்பும் கிடைத்தது.

இலக்கண இராமசாமி என அழைக்கப்படும் அருட்பனாந்தரின் தொடர்பும் கிடைத்தது. இவர் இராமநாதனுக்கு ஆன்மீக வழிகாட்டியாக விளங்கினார். இவ்விரு பெரியார்களின் தொடர்பால் நிறைமனிதனாகத் திகழ்ந்தார். இராமநாதன்.

நாட்டின் அரசியல் சமூக, சமய பொருளாதாரத் துறைகளில் எல்லாம் அவரது சிந்தனையும் சென்று செழித்திருந்தமையைக் காணலாம். எனினும். இன்றும் இப்பெரியாரை நினைவுகூரப்பண்ணுபவையாய் அவர் நிகழ்த்திய சாதனைக்களுக்கான பிரத்தியட்ச சாட்சியாய் நிற்பவை அவர் மேற்கொண்ட கல்விப்பணிகளேயாகும். இப்பெரியாரால் மேற் கொள்ளப்பட்ட கல்விப் பணிகள் கல்வி பற்றிய அவரது தெளிந்த சிந்தனைகளின் அடிப்படையிலேயே மேற்கொள்ளப்பட்டன.

கல்வி பற்றிய அவரது சிந்தனைகள் அதிநவீன காலத்துக் கல்விச்சிந்தனைகளோடும் பெரிதும் ஒத்தப்போவனவேயாகும். அன்னாரது பன்முகப்பட்ட பணிகளுள் விதந்துரைக்கத் தக்கவகையில் அமைவதான கல்விப்பணியையும் அதற்கான சிந்தனைகளையும் அவற்றின் இன்றைய தேவைகளையும் நாம் கருத்தில் கொள்ள வேண்டியவர்களாக உள்ளோம். அவராற்றிய பணிகளின் பெருமையை உணர்ந்து கொள்வதற்கு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவரால் நிறுவப்பட்ட வித்தியாலயங்களும் கல்வியிலே கலை வண்ணம் காட்டிநிற்கும் பொன்னம்பலவாணேச்சரம் என்னும் ஆலயமும் பிறவும் இன்றும் சான்றுகளாக நின்று நிறைகின்றன.

சமூகம், பண்பாடு என்பவற்றைக் கருத்திற்கொண்ட அவற்றின் எல்லைகள் மாசுபடாமல் நவயுகத்தை சமூகம் சந்திப்பதற்கு ஏற்ற கல்வியை வழங்குவதற்கு இராமநாதவள்ளல் எடுத்த முயற்சிகள் அளப்பரியன. கல்விப் பணிகளின் மூலமும் அவர் இந்துக்களிடையே சமயப் பண்பாட்டு விழிப்புணர்ச்சியை ஏற்படுத்துவதில் முனைப்பாகச் செயற்பட்டார். "கல்வி என்பது இறுக்கமான அச்சில் வார்க்கப்பட்ட ஓர் பொருளன்று, கல்வி முறை காலத்திற்குக் காலம் சந்ததிக்குச் சந்ததி வேறுபடும்.

காலப்போக்கில் ஈழத்தின் வடக்கிலும் மேற்கிலும் பல்கலைக்கழகங்கள் தேவைப்படும். அவை எங்கு அமைகின்றனவோ அவை அந்த இடங்களது அல்லது அந்தந்த மாவட்டங்களின் பெயர்களைக் கொண்டதாக இருத்தல் நன்று" எனவும் குறிப்பிட்டார். இச்செய்தியில் கல்வி நிலையங்கள் சமயம், இனம், மொழியின் பெயரால் அன்றி மாவட்டங்களின் பெயர்களைத் தாங்குவதால் வேற்றுமைகளும், பேதங்களும் இல்லாதொழியும் என்னும் அன்னாரின் அற்புதமான சிந்தனைத்திறன் அவரின் தீர்க்கதரிசனம் இருப்பதை இலகுவில் மதிப்பிடல் அரிதே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒவ்வொரு மாணவனும் தத்தம் சமயத்தைக் கட்டாயம் படிக்க வேண்டும். ஆனால் சமய ஞானம் ஏட்டளவில் - கற்று பரீட்சைக்குத் தோற்றியவுடன் முடிவதில்லை. அது நடத்தையிலே பயிற்சிக்கு வர வேண்டும் என்பதனால் யாழ்ப்பாணத்தில் கல்லூரிகள் அமைத்த இடங்களில் எல்லாம் கோயில்களும் அருகருகாக அமைக்கப்பட்ட இந்து சமுதாயத்தின் பண்பாட்டு விருத்தியில் மேன்மைகள் ஏற்பட வழிவகுத்தார். இந்து மாணவர்கட்கு லௌகீகமும் ஆன்மீகமும் இணைந்த கல்வியினை அளிக்கும் கல்லூரிகளின் அவசியத்தை உணர்ந்ததால் இருபாலார்க்குமாக பெரிய கல்லூரிகளை அமைப்பதன் மூலம் உலக வாழ்விலும் ஆத்மதிருப்தி ஏற்படுத்த முடியும் என நம்பினார். அவர் கல்விப்பணியில் பெண் கல்விக்கு முதலில் குறிப்பிடப்பட வேண்டிய ஒரு அம்சமாகும்.

ஒரு பிள்ளை ஆண்டியாவதும் அரசனாவதும் அன்னை வளர்ச்சியிலே என்பர் ஆன்றோர். ஒரு ஆண்மகனுக்குக் கல்வி அளித்தால் அது தனி ஒருவனுக்கு ஆகிறது. ஆனால் அதே நேரத்தில் ஒரு பெண்பிள்ளைக்கு அளிக்கப்படும் கல்வி ஒரு குடும்பத்துக்கு வழங்கும் கல்வியாகிறது எனும் உண்மை பெரியாரின் உள்ளத்தில் ஆழப்பதிந்திருந்தது. அந்நிய மோகமும் " மத மாற்றமும் அவர்கள் பண்பாட்டோடு, கலாச்சாரத்தோடு இணைந்த கல்வி முறையில் இருந்து வரவேண்டும். என ஆசைப்பட்டார். சைவ சூழலிலேயே சைவப்பண்பாடு, எம்மொழிக்கலாசாரம் ஆகியவற்றை உள்வாங்கி எம் பெண் பிள்ளைகள் கல்வி பெறவேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அப்பொழுது தான் ஒரு பெண் நல்ல மனைவியாக, நல்ல தாயாக, குடும்ப முன்னேற்றத்தின் முக்கிய பங்காளியாக உருப்பெற முடியும் என உறுதிகொண்டார். வள்ளுவப் பெருந்தகை. கூறியது போன்று "மனத்தக்க மான்புடையாளாகித் தற்கொண்டான், வளத்தக்களாக, மனைமாட்சியுடையவளாக கற்பெனும் திண்மையுடையவளாக தற்காத்துத் தற்கொண்டான் பேணிதகை சான்ற சொற் காத்து நிற்பவளாக, விருந்தோம்பும் பண்புடையவளாக பெண் சமூகத்தில் விளங்க வேண்டும் என்பதே பெரியாரின் அசையா உள்ளக்கிடக்கை.

இத்தகைய குணநலம் மிக்க பெண்கள் உருவாக்கத்திற்கான கல்வியை முதலில் வழங்க வேண்டும் எனப்பெரியார் திடசங்கற்பம் பூண்டார்.

*"எண்ணிய எண்ணியாங்கு எய்துவர்*
*எண்ணியர் திண்ணியராகப் பெறின்"*

என்று கூறியுள்ளார். வையத்துள் வாழ்வாங்கு வாழ வழிவகுத்த வள்ளுவர் பெருமான் இக்குறளின் இலக்கணமாக விளங்கிய இராமநாத வள்ளல் தன் எண்ணத்தை எண்ணியாங்கு அமைய 1913ல் இராமநாதன் பெண்கள் கல்லூரியை நிறுவினார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இக்கல்லூரிக்கான அடிக்கல் 03.06.1910ல் சுன்னாகம் மருதனார் மடச்சந்தியில் வாங்கப்பட்ட நிலத்தில் நாட்டப்பட்டது. கூட்டம் துரிதமாக எழும்பிய வேளையில் சென்னையில் பத்திரிகை நிருபர்களுக்கு அளித்த பேட்டியொன்றில் இராமநாத வள்ளல் "பத்துவயதிற்கும் பதினெட்டு அல்லது பத்தொன்பது வயதிற்கும் இடைப்பட்ட பெண் பிள்ளைகள் பண்பு மிக்க ஆங்கில இந்துப் பெண்களிடம் கல்வி பெறுவர்"

என குறிப்பிட்டமை அவரது பெண்கள் உயர் கல்வியின் முக்கியத்துவத்தில் கொண்டுள்ள ஆர்வமிக்க அக்கறையை வெளிக்காட்டுவதாக உள்ளது.

அதேவேளை யாழ்ப்பாணத்தில் இருந்து வெளியாகும். இந்து ஓகஸ்(Hindu Orya) ஆங்கிலப் பத்திரிகை

> ***"திரு. இராமநாதனின் பெண்கள் கல்லூரி யாழ்ப்பாணத்தில் திறக்கப்பட உள்ளது அது இலங்கைத் தேசியத்தின் வரலாற்றில் பதிய சகாப்தத்தை உருவாக்குவதாய் இருக்கும்"***

என எழுதியிருந்தது.

1913ம் ஆண்டு கல்லூரி நிறுவப்பட்ட முன்னரே பெரியாரின் இலட்சியக் கனவு இவ்வாறெல்லாம் வெளியிடப்பட்டது. 1926ல் இலங்கைக்கு விஜயம் செய்த இந்திய



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தேச பிதா மகாத்மாகாந்தி அடிகள் இராமநாதன் கல்லூரிக்கு வருகை தந்திருந்தார் அவர். இங்கு உரையாற்றுகையில்

> *"இராமநாதன் அவர்களின் பரோபகாரப் பண்பின் நினைவாலயமாக இக்கல்லூரி நிலைத்து நிற்கும்"*

என வாயார வாழ்த்தியமை குறிப்பிடத்தக்கது.

பெரியார் தான் திட்டமிட்டபடி இந்துப் பண்புமிக்க ஆங்கிலப் பெண்களை அடுத்தடுத்து அதிபர்களாக்கிப் போதனைகளை நடாத்தினார்.

> *"சைவப் பண்பாட்டு விழுமியங்களில் பெண்கள் பயிற்சி பெற்று பல நல்ல காரியங்களை ஆற்றும் நல்ல பெண்மணிகளாக நல்ல இல்லத்தரசிகளாகத் திகழ வாய்ப்பு ஏற்படுத்தப்படும்"*

எனவும் தெரிவித்தார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவ்வாறு தெரிவித்த பெரியார் தான் பேசியதைச் செயல்படுத்தியும் காட்டினர். மாணவிகள் சைவ பண்பாட்டு முறையிலேயே அன்றாட செயல்பாடுகளில் திகழவேண்டும் அதற்கான பயிற்சியைக் கல்லூரியில் பெற வேண்டும் என்பதற்காக பெரிய விடுதிச்சாலை மாணவிகள் தங்கிக் கல்வி பெற கல்லூரியில் அமைத்துக் கொடுத்தால். இதனால் உடை, உணவு, வழிபாட்டு முறைகள் யாவற்றிலும் சைவப் பண்பாடு பேணப்பட்டது.

மேலும் அழகியல் கலைகள் மூலம் ‘சைவசமய பண்பாட்டு, கலாச்சார விழுமியங்களைக் பேணப்படலாம் பேணப்பட வேண்டும்.’ என்பது அவரது குறிக்கோள் இதன் பொருட்டு அழகியல் கலைககள் கல்லூரியில் பயிற்சிக்காக நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன.

அழகியற் கலைகள் பண்புடையவர்களாகுவதோடு மனமகிழவோடு இல்லத்தை நல்லமாக்க உதவும் பெண்கள் தாம் ஏற்கும் சமூக கடமைகளை மன அழுத்தமின்றி போட்டி பொறாமையின்றி தாழ்வு மனப்பான்மையின்றி செவ்வனே செயல்பட் வழிவகுக்கும் என்பது அவரது அவையாத நம்பிக்கை. இதனால்தான் அவரது கல்வி இலக்குத் தொடர்பான சிந்தனையில் மனிதன் மாட்சிக்கு அழகியற்கலை உதவும் என்ற கோட்பாடும் இடம்பெற்றிருந்தது. முக்கியமாக இசைக்கலை கல்விப்பயனை அதிகரிக்கும் என்பது அவரது முடிவு திருமுறைகளைப் பண்ணேடுபாடும் பண்டைய மரபு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மறுமலர்ச்சிபெற செய்வதற்கு முயற்சி எடுத்தார். கல்லூரியின் செயல்திட்டம் பற்றி விபரித்து விளங்குகையில்

"தமிழ் இலக்கியம், இசை,இந்துக்களின் ஏனைய கலைகள் என்பவற்றை மறுமலர்சசி அடையச் செய்ய எல்லா முயற்சிகளும் மேற்கொள்ளப்படும்" என குறிப்பிட்டார். இவ்வாறு அவர் குறிப்பிட்டது தமிழரது அழகியல் சார்ந்த பண்பாட்டு விழுமியங்கள் பழங்காலம் தொட்டு தமிழரின் வாழ்வை வளம்படுத்தி வந்ததை உளம் கொண்டே கல்வி நற்பயன் தர அழகியற்கலை உதவும் என பெரியார் கருதினார். இதனால் இந்தியாவில் இருந்து இசை, நடன, கலைஞர்களை வரவழைத்து மாணவியருக்குப் பயிற்சியளிப்பித்தார்.

அதே வேளை இசை, நடன, நாடககலைகள் யாவும் சைவ தமிழ் இந்து பண்பாட்டை கலாச்சார விழுமியங்களை போதிக்க வேண்டும் என்பதில் கவனம் செலுத்தினார். அழகியல் பற்றிய அவரின் இலட்சியங்கள் இன்று அவர் கல்லூரி வளாகத்தில் அமைந்துள்ள இராமநாதன் நுண்கலைக் கல்லூரியால் நிறைவேற்றப்படுகின்றன. இந்த நுண்கலைப்பீடம் அவரின் தூர நோக்கையும் தீர்க்க தரிசனத்தையும் இறையருள் கைகூட்ட வைத்துள்ளது எனலாம்.

இராமநாதன் மகளிர் கல்லூரியை நிறுவியதோடு மட்டும் நின்றுவிடாது பெரியார் அக்கல்லூரியில் பயிற்சி பெற்றுச் சென்ற பழைய மாணவியருக்கு 1927ல் "சைவ மங்கையர் சபை" ஒன்றை அமைத்தார். இச்சபையின் ஆரம்பவிழா உரையில்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

***"சைவ மங்கையரான பழைய மாணவியரும் ஆசிரியைகளும் நல்லறிவுச்சுடரையும் தமதுசமய ஒழுக்கத்தையும் தாம் மேற்கொண்ட வாழ்வு வட்டத்தில் ஒளி பெறச் செய்து ஒன்றிணைய வேண்டும்"***

என அறைகூவல் விடுத்தார்.

பெரியாரின் மகளிர் கல்விப்பணியின் சிறப்பாகக் குறிப்பிட வேண்டிய சைவாசிரியப் பயிற்க்கலாசாலை ஒன்று நிறுவியமையாகும். இக்கலாசாலை ஆசிரிய சமூகத்தின் சைவப் பண்பாட்டு மறுமலர்ச்சிக்காக நிறுவப்பட்டது. இந்தக் கலாசாலையில் பயிற்சி பெற்ற பெண்மணிகள் இந்து சமய மக்களின் மத்தியில் சைவ பண்பாட்டுப் பாரம்பரியத்தை வளர்தெடுக்க அவற்றை மனம் கொளச்செய்ய பெரும்பாடுபட்டு உழைத்தார்.

அடுத்து ஆண்பிள்ளைகளும் சமய வாழ்வு, சமயஞானம் உடையவர்களாக விளங்கினாலே நல்லதொரு இந்துப் பண்பாட்டு கலாசார சமூகம் உருவாக வழிவகுக்கும் என உணர்ந்த பெரியார் இப்பண்புகளை ஆண்பிள்ளைகளுக்கும் வழங்க 1921ல் பரமேஸ்வரனின் திருநாமத்தைப் பெயராகக் கொண்டு பரமேஸ்வராக் கல்லூரியை நிறுவினார். அச்சந்தர்ப்பத்தில் "பரமேஸ்வராக்கல்லூரி மாணவர்களின் லட்சியம்" என்ற



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தலைப்பில் ஒரு தூண்டுப்பிரசுரம் வெளியிடப்பட்டது. இத்துண்டுப்பிரசுரத்தில் பெரியார் இராமநாதன்

01) உண்மையினை நேசிக்கும் மாணவன் ஒருவனது அமைதி நிறைந்த உள்ளத்தின் நிலையே கட்டுப்பாடு ஆகும். அந்நிலை கைவரப்பெற்றால் எச்சொல், எச்செயல் அங்கீகரிக்கத் தக்கது, தகாதது என்பது நன்கு பலனாகும்.

02) தூய சிந்தனைகளை உருவாக்கும் பொறி எனத்தக்க உள்ளம் தூய்மையற்ற சிந்தனைகளுக்கும் ஆசைகளுக்கும் இடமளிக்காது.

03) வெறுப்பையும், துரோகத்தையும், பயனற்ற முரண்பாடுகளை ஏற்படுத்தும் சொற்களைப் பேசவும் அனுமதிக்கலாகாது.

04) இழிவான நோக்கங்களை நிறைவேற்ற தனது உடலின் எந்த உறுப்புக்களையும் பயன்படுத்தவும் இடமளிக்கக் கூடாது.

என அறிவுறுத்தியுள்ளார். பெரியார் விரும்புவது என்ன? ஒருவன் கட்டுப்பாடும் ஒழுக்கமும், பண்பாடும் ஆளுமையும் உள்ள மனிதனாக விளங்க வேண்டும் என்பதேயாகும். இன்று நம் மத்தியில் நிலவும் அமைதியின்மை, இளைஞர்கள், யுவதிகள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பலரின் விரும்பத்தகாத செயல்கள், கலாசார சீரழிவுகளைப் பார்க்கும் போது இராமநாத வள்ளல் நம் மத்தியில் இப்போது இல்லையே என வருந்த வேண்டியுள்ளது.

முத்தமிழ் வித்தகர் சுவாமி விபுலானந்த அடிகளார் ஓர் எழுத்தாக்கத்தில்

> ***"தமிழ் மக்களின் மானத்துக்கு ஈனம்***
> ***நேரும்பொழுது உயிரினும் மானம் சிறந்தது***
> ***எனக் கொண்ட பழந்தமிழ் மக்களின்***
> ***வழித்தோன்றலாகிய இராமநாமன் எனும்***
> ***வீரபுருஷர் இல்லையே என யாம்***
> ***வாட்டமடைகிறோம்"***

என பெரியார் இராமநாதனின் அருமையை, தேவையை எண்ணி மனம் வருந்தினார்.

மேற்படி நிறுவனங்களை விட 1923ல் ஆரம்பிக்கப்பட்ட சைவ வித்தியா விருத்திச்சங்கமும் 1880ல் அமைக்கப்பட்ட சைவ பரிபாலன சபையும் இராமநாத வள்ளலின் சைவசமய நெறிகளையும், சைவ பண்பாட்டையும் வளர்த்தெடுக்க, செயலாக்க ஏற்படுத்தப்பட்ட பல்கலைகழகங்களையும், கல்விசார் போதனைகளையும் போதிக்கும் கல்விக் கூடங்களாக அமைக்க வேண்டும். என்ற அவரின் கனவு இன்று நனவாகி பரமேஸ்வராக்கல்லூரி யாழ்ப்பாணப் பல்கலைக்கழகமாகவும், இராமநாதன் கல்லூரி வளாகத்தில் நுண்கலைப்பீடமும் விளங்குவதை நோக்கும் போது அவரின் தீர்க்கதரிசனமும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தூரநோக்கும் துலங்குகிறது. இந்நிறுவனங்கள் அவரின் இலட்சியங்களுக்குச் செயல்வடிவம் கொடுத்து அவர் சிந்தனைகள் நம் மண்ணில் செழிப்படையச் செய்வதே நன்றிக்கடனுமாகும்.

வளர்ந்துவரும் சனத்தொகைக்கு மேன்மேலும் கல்விச்சாலைகள் விரிவடைய வேண்டிய நிலை நம்நாட்டில் உருவாகிறது. இந்நிலை போக்க இராமநாத வள்ளலைப் பின்பற்றி எல்லோருக்கும் கல்வி பெற ஆவன செய்ய வேண்டும் இப்பணி கோடி புண்ணியம் தருமம் என மகாகவி பாரதியாரின்

*"இன் நூல்கனிச் சோலைகள் செய்தல்*
*இனிய நீர்த்தண் சுனைகள் இயற்றல்*
*அன்ன சக்திரம் ஆயிரம் வைத்தல்*
*ஆலயம் பதினாயிரம் நாட்டல்*
*பின்னருள்ள திருமங்கள் யாவும்*
*பெரிய விளங்கி ஒளிர நிறுத்தல்*
*அன்னயாவினும் புண்ணியங்கோடி*
*ஆங்கோர் ஏழைக்கெழுத்தறிவித்தல்"*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எனும் செய்யுளை நாம் மனங்கொண்டு ஏழைக்கெழுத்தறிவித்துப் புண்ணியங்கோடி தேடிய இராமநாதவள்ளலாரையும் என்றும் சிந்தையில் இருத்திக் கல்விப்பணிக்கு அவர் தந்துபோன சிந்தனைகளை சாதனையாக்கி அதன் மூலம் அப்பெரியாரை சிந்தையில் இருந்தி அவருக்கு நன்றியோடு அஞ்சலி செலுத்தி வணங்குவோம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org